CHAMBRE DE COMMERCE PONDICHERRY
SERVICE & INTEGRITY
Founded 13-02-1849

# வர்த்தக சபை
# செய்தி வெளியீடு

புதுச்சேரி.

வெளியீடு : 4 ஜனவரி - மார்ச் : 2012



## தலைவரிடமிருந்து.......

அன்பார்ந்த உறுப்பினர்களே !

என் தலைமையிலான நிர்வாகக்குழு பொறுப்பேற்று ஓர் ஆண்டை நிறைவு செய்துள்ளது. கடந்த ஓர் ஆண்டில் பல பணிகளை சிறப்புடன் செய்ததற்கு உறுப்பினர்களாகிய உங்களது ஒத்துழைப்பும் ஆதரவுமே காரணம் ஆகும்.

நிதியாண்டு 2011 - 2012 முடிவு பெற்று, நமது வர்த்தக சபையின் 4-வது காலாண்டு செய்தி வெளியீடு வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

கடந்த ஆண்டில் நமது வர்த்தக சபை பல வியத்தகு செயல்பாடுகளை செய்துள்ளதை நீங்கள் அனைவரும் நன்கு அறிந்ததே. பலர் பாராட்டியதையும் சிலர் குறை கூறியதையும் இத்தருணத்தில் நினைவு கூற விரும்புகிறேன். போற்றுவார் போற்றட்டும், தூற்றுவார் தூற்றட்டும் என்கிற சான்றோர்களின் வாக்கினை மனதில் கொண்டு வர்த்தக சபை மேலும் திறம்படச்செயல்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த 02-12-2010 அன்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற Meeting of Standing Committee for Traffic Regulations கூட்டத்தில் நமது வர்த்தக சபையின் சார்பாக முன்னாள் தலைவர். திரு. மு. சிவசங்கர் அவர்கள் நேரு வீதியிலுள்ள பழைய சிறைச்சாலையினை வாகனங்கள் நிறுத்துமிடமாக (Parking Complex) ஆக மாற்றிட வேண்டுமென ஆலோசனை வழங்கினார். இதனை, அப்போதைய சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. எஸ்.பி. சிவக்குமார், திரு. க. லட்சுமிநாராயணன், மற்றும் திரு. இரா. சிவா, ஆதரித்தனர். அதனைத் தொடர்ந்து நான் 18-12-2011 அன்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கு மீண்டும் இதுதொடர்பாக ஓர் நினைவூட்டல் கடிதம் அளித்தேன். இந்நிலையில், 23-03-2012 அன்று மாண்புமிகு. முதல் அமைச்சர் அவர்கள், புதுவை நேரு வீதியிலுள்ள பழைய சிறைச்சாலை இருந்த இடம் பார்க்கிங் கார்னராக மாற்றப்படும் என்று அறிவித்துள்ளார். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நமது வர்த்தக சபையின் சார்பாக நன்றியினையும், பாராட்டுதலையும் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். இது புதுவைக்கு ஓர் வரப்பிரசாதம்.

புதுவையில், 10,000-க்குமேல் கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் பதிவு செய்யாமல் செயல்படுவதாகவும் அவர்களை புதுச்சேரி கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம் 1964-ன் கீழ் பதிவு செய்ய வசதியாக வர்த்தக சபையின் வரவேற்பரங்கில் 07-03-2012 முதல் 16-3-2012 வரை சிறப்பு முகாம் நடத்தப்பட்டது. பல ஆயிரம் கடைகளும், நிறுவனங்களும் பதிவு செய்து கொள்ளுமாறு தொழிலாளர் ஆணையர் அவர்கள் கேட்டுக் கொண்டதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். எனவே, பதிவு செய்யாதவர்கள் பதிவு செய்து கொள்ளுமாறு மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

28-03-2012 அன்று நடைபெற்ற நிர்வாகக் குழு கூட்டத்தில் 2012-2013 நிதியாண்டு நிதிநிலை அறிக்கையில் (Budget) ரூ.2.00 லட்சம் வர்த்தக மையம் (Trade Centre) அமைக்க (Token Provision) அச்சாரமாய் ஒதுக்கப்பட்டுள்ளதை தங்கள் அனைவருக்கும் இருத்தருணத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

மத்திய அரசு செயல்படுத்தவுள்ள இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச்சட்டம் 2006 (The Food Safety and Standards Act 2006) பற்றிய விழிப்புணர்வு கூட்டம் நடத்திட ரூ. 25,000/- செலவிட முடிவு எடுக்கப்பட்டது. இக்கூட்டத்திற்கு அனைத்து வியாபார பெருமக்கள், ஓட்டல் உரிமையாளர்கள், உணவுப்பொருட்கள் தயாரிப்பாளர்கள், பலசரக்கு விற்பனையாளர்களை அழைத்து, கூட்டம் நடத்த உள்ளோம்.

அன்றைய குழு கூட்டத்தின் முடிவில் ஸ்ரீவிஜயகணபதி ஸ்டோர் உரிமையாளரும், நமது வர்த்தக சபையின் நிர்வாக குழு உறுப்பினருமாகிய திரு. சி. உதயகுமார் அவர்கள் நமது வர்த்தக சபையின் உபயோகத்திற்கென்றே ஒரு 17" "SAMSUNG" கணினியை நன்கொடையாக வழங்கினார். இதனை, வணிக வரித்துறை தொடர்பான பணிகளான, சி.பார்ம் (C-Form) இதர ஆவணங்கள் தயார் செய்து அனுப்ப (Online) வியாபார பெருமக்களுக்கும், நமது வர்த்தக சபை உறுப்பினர்களுக்கும் சேவை செய்ய பயன்படுத்தப்படும். எனவே வர்த்தக சபை தலைவர் உள்பட அனைவரும் அவருக்கு, நன்றியினையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொண்டனர்.

கடந்த ஆண்டில் பல்வேறு பணிகளை சிறப்பாகவும், விரைவாகவும் செய்து முடித்துள்ளோம். நமது உறுப்பினர்களின் விவரங்கள் அடங்கிய Member's Directry - 2000 - 2011 வெளியிடப்பட்டது நமது வர்த்தக சபையின் நடவடிக்கையில் ஓர் மைல்கல் என்று பலதரப்பினர் பாராட்டுகின்றனர். அனைத்தும் சாத்தியமாகும் உங்கள் ஆதரவால் மட்டுமே.

அடுத்த நிதியாண்டில் எல்லோரும் எல்லா நலமும் பெற வாழ்த்தி நிறைவு செய்கிறேன்.

நன்றி ! வணக்கம் அன்புடன்.

**கே.ஏ. செண்பகராஜன்**


THANGAM™
AGMARK
GINGELLY OIL
FREE FROM ARGEMONE OIL
FOR TASTY FOOD
100% Vegetarian
Grade I
Graded By
G & O.G.Lab.
Pondicherry
Manufactured by
SRI SAKTHI BALAJI OIL MILLS
Pondicherry - 605 110. Ph: 0413-2291668, 2292998

# இதர நிகழ்வுகள்....

கடந்த காலாண்டில் மூன்று (3) நிர்வாகக்குழு கூட்டங்கள் நடைபெற்று முக்கிய முடிவுகள் எடுக்கப் பெற்றது. அவைகளில் குறிப்பிடத்தக்கவை. (1) வர்த்தக மையம் (Trade Centre) அமைப்பது தொடர்பாய் முதல்வர் அவர்களுக்கு அழைப்பு விடுத்தது அவரும் 13-01-2012 அன்று இடத்தினை பார்வையிட்டது. (2) மதிப்பு கூட்டு வரி உயர்வினை மறு பரிசீலனை செய்ய 05-01-2012 அன்று மாண்மிகு முதல் அமைரை சந்தித்து மனு கொடுத்தது (3) தானே புயல் துயர் துடைக்க முதல் அமைச்சர் நிவாரண நிதிக்கு நன்கொடை கோரியது. 26-01-2012 அன்று குடியரசு தின விழாவினை முன்னிட்டு நமது வர்த்தக சபை கட்டடத்தில் தேசியக் கொடி, பொதுச் செயலாளர் அவர்களால் ஏற்றப்பெற்றது.

கடந்த 20-01-2012 அன்று தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் நிர்வாகிகள் அதன் தலைவர். திரு. ஏ.எம்.விக்கிரமராஜா அவர்களின் தலைமையில் வருகை தந்தனர். வர்த்தக சபை தலைவர், திரு.கே.ஏ.செண்பகராஜன் அவர்கள் அனைவரையும் வரவேற்று சால்வை அணிவித்து மரியாதை செய்தார். 31-01-2012, அன்று சென்னையில் நடைபெற உள்ள, உணவுப் பாதுகாப்பு (திருத்த) சட்ட எதிர்ப்பு மாநாட்டிற்கு வருகை தர வேண்டுமென கோரிக்கை விடுத்தனர். பன்னாட்டு நிறுவனங்கள் சில்லரை வணிகத்தில் ஈடுபட்டால் உருவாகும் விளைவுகள் குறித்து கூட்டத்தில் விரிவாக ஆலோசிக்கப்பட்டது. பின்னர் அவர்களது கோரிக்கையினை ஏற்று மாநாட்டில் புதுச்சேரி சார்பாக, தலைவர், திரு.கே.ஏ. செண்பகராஜன்அவர்கள் தலைமையில் பொதுச்செயலாளர் திரு.சு.குணசேகரன், பொருளாளர், ச. தண்டபாணி(எ) ராஜா, குழு உறுப்பினர்கள், திரு. க. வெங்கடேசன், திரு. சி.உதயக்குமார் உள்ளிட்டவர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

புதுச்சேரி மாநிலம் ஏனாம் பிராந்தியத்தில் ஏற்பட்ட தொழிலாளர் பிரச்சனை தொடர்பாக 02-02-2012, அன்று புதுச்சேரியில் முழு அடைப்பு (பந்த்) நடத்துவது என்று சில தொழிற்சங்கங்கள் அழைப்பு விடுத்தனர். அதனையடுத்து, நமது வர்த்தக சபை மற்றும் பல்வேறு வணிகர் சங்கங்களின் பொறுப்பாளர்கள் ஒன்று கூடி விவாதித்து, தானே புயல் பாதிப்பு மற்றும் வணிகவரி உயர்வால் புதுச்சேரியில் வணிகம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதால், முழு அடைப்பை (பந்த்) கைவிடக் கோரினோம். நமது வேண்டுகோள் ஏற்கப்படாமல் போனதால் வேறுவழியின்றி முழு அடைப்பை புறக்கணிப்பது என்று முடிவு செய்து அறிவிப்பு வெளியிட்டோம். அதனைத் தொடர்ந்து 01-02-2012 அன்று மாண்புமிகு. முதல்வர் அவர்களை சந்தித்து முழு அடைப்பு நடைபெறும் அன்று அனைத்து கடைகள், வணிக நிறுவனங்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கும்படி கோரினோம். நமது கோரிக்கையை ஏற்ற முதல்வர் உடனடியாக காவல்துறைத் தலைவர் (பொறுப்பு) திரு. அதுல்கத்தாரி அவர்களை அழைத்து உரிய பாதுகாப்பு வழங்க உத்தரவிட்டார். முழு அடைப்பு நாளான 02-02-2012, அன்று நேரு வீதியில் கடைகளை மூடச்சொல்லி வன்முறையில் ஈடுபட்ட சிலரின்மீது நடவடிக்கை எடுக்கும்படிச் சம்பந்தப்பட்ட இடத்துக்கே தலைவர், திரு. கே.ஏ. செண்பகராஜன், பொதுச்செயலாளர், திரு.சு.குணசேகரன், முன்னாள் தலைவர், திரு. மு. சிவசங்கர், இணைப்பொதுச்செயலாளர் க. முகம்மது சிராஜ் பொருளாளர், திரு.ச. தண்டபாணி (எ) ராஜா உள்ளிட்ட பல்வேறு பொறுப்பாளர்கள் சென்று காவல்துறையிடம் முறையிட்டதன்பேரில் அனைத்துக் கடைகள், வணிக நிறுவனங்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

வர்த்தக சபை தோற்றுவிக்கப்பட்டு 162 ஆண்டுகள் நிறைவுற்று 163-ம் ஆண்டு (1849-2012) தொடங்கப்படுவதையொட்டிக் கடந்த ஆண்டு கொண்டாடியதைப் போன்று இந்த ஆண்டும் உறுப்பினர்கள், மற்றும் அவர்களது குடும்பத்தினர் பங்கேற்கும் வகையில் ஓர் குடும்ப விழாவாகக் கொண்டாட திட்டமிடப்பட்டு, கடந்த12-02-2012, ஞாயிறு மாலை 5.00 மணிக்கு, அனுமந்தை டோல்கேட் அருகில் உள்ள ஓட்டல் ஓஷன் ஸ்பிரேவில் மகிழ்ச்சியுடன் கொண்டாடப்பட்டது. வர்த்தக சபை உறுப்பினர்களின் குடும்பத்தினர் பங்கேற்ற பல்வேறு விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பெற்று இரவு சுமார் 7.00 மணிக்கு மிகச் சிறப்புடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இரவு விருந்துக்குப் பின்னர் நிகழ்ச்சி நிறைவுற்றது.

2012 அன்று மாண்புமிகு. முதல்வர் அவர்களை நேரில் சந்தித்து வர்த்தக மையம், (Trace Centre) மற்றும் வணிகர் நல வாரியத்தை உடன் தொடங்குவது பற்றிய கடிதமும், தானே புயல் நிவாரணத்திற்காக முதல் அமைச்சர் நிவாரண நிதிக்கு ரூ. 2,50,831/-க்கான 34 காசோலைகள் 3 கேட்பு வரைவோலைகளையும் வழங்கினோம். இதில் ரூ. 50,000/- வர்த்தக சபையின் நிதியிலிருந்து வழங்கப்பெற்றது. மாண்புமிகு. முதல்வர் அவர்கள், நிவாரண நிதி வசூலித்து வழங்கிய நம் செயல்பாட்டை பெரிதும் பாராட்டி, நன்றினை தெரிவித்துக் கொண்டார்.

அனைத்து உறுப்பினர்களின் தகவலுக்காக தானே புயல் நிவாரண நன்கொடை வழங்கியவர்களின் பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. வர்த்தக சபை சார்பாகவும், என்சார்பாகவும் நன்றியினையும் பாராட்டுதலையும் இத்தருணத்தில் கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

நமது வர்த்தக சபையின் பொதுச் செயலாளர், திரு. சு. குணசேகரன் அவர்களை தென்னக ரயில்வேயின், திருச்சி மண்டல ரயில்வே உபயோகிப்பாளர்கள் கவுன்சில் (DRUCC) உறுப்பினராக 01-10-2011 முதல் 30-09-2013 வரை நியமனம் செய்யப்பட்டுள்ளதை அனைத்து உறுப்பினர்களின் தகவலுக்காகத் தெரிவிக்கப்படுகிறது. தவிர, புதுச்சேரி - விழுப்புரம் அகல ரயில்பாதை, அது மின்மயமாக்கப்பட்டதில் நமது வர்த்தக சபையின் பங்கு மிக முக்கியமானது என்பதை இத்தருணத்தில் குறிப்பிட விரும்புகிறோம்.

புதுச்சேரி யூனியன் பிரதேச 2012-2013 நிதியாண்டுக்கான வரவு - செலவு (பட்ஜெட்) நிதிநிலை அறிக்கை மற்றும் மதிப்புக் கூட்டு வரி (வாட்) உயர்வு மற்றும் வணிக அவையின் திட்டங்கள் பற்றியக் கலந்துரையாடல் கூட்டம் 10-03-2012 சனிக்கிழமை மாலை 4.00 மணியளவில் வர்த்தக சபை கட்டடத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு திரு. ப. ராஜேந்திரன், துணைத்தலைவர், அவர்கள் தலைமை ஏற்றார் கூட்டத்தின் முடிவில், புதுவை அரசின் 2012-2013-ம் ஆண்டின் வரவு - செலவு (பட்ஜெட்) நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யும் போது, 2007-ம் ஆண்டு முதல் 31-12-2011 வரையில் அமுலில் இருந்த மதிப்புக் கூட்டு வரியினையே மீண்டும் செயல்படுத்திட வேண்டுமெனவும் வரிஉயர்வினை கைவிடவேண்டும். என மாண்புமிகு புதுவை முதல் அமைச்சர் அவர்களுக்கும் திரு. ஆணையர், வணிக வரித்துறை புதுச்சேரி அவர்களுக்கும் மனு கொடுப்பதென ஏகமனதாக முடிவு செய்யப்பெற்றது மேலும் கூட்டத்தில் பல்வேறு வணிகர் சங்கங்களின் பொறுப்பாளர்கள் மதிப்புக் கூட்டு வரி / மத்திய விற்பனை வரி தொடர்பான தங்களின் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் கூறினர்.

குறிப்பாகத் தமிழ் நாட்டில் உள்ள மதிப்புக் கூட்டு வரி விகிதம் புதுவையிலுள்ள வரி விகிதம் மற்றும் இதர பிரச்சனைகள் குறித்து இக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

கலந்துரையாடல் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளையும், பரிந்துரைகளையும், வணிக வரித்துறை ஆணையர் அவர்களைச் சந்தித்து 21-03-2012 அன்று வழங்கப்பட்டது.

29-02-2012 அன்று நடைபெற்ற நிர்வாகக் குழு கூட்டத்தில் M/s. பே ன் கேஸ்டல் நிறுவனம், திரு. கோவிந்தராஜு, உரிமையாளர் சங்கரா பில்டிங்ஸ், எண். 44-46, நேரு வீதி, புதுச்சேரி ஆண்டுச் சந்தா உறுப்பினராகச் சேர்க்கப்பட்டது.

தானே புயலால் புதுச்சேரி கடற்கரைப் பகுதி கடுமையான சேதத்திற்குள்ளாகி உள்ள நிலையில்

### காசோலை, வரவேலை இனி 3 மாதங்கள் மட்டுமே செல்லும். இந்திய ரிசர்வ் வங்கி அறிவிப்பு

பொதுமக்கள் மற்றும் வங்கிக் கொள்கையின் நலனையொட்டி காசோலைகள் (Cheque) வரைவோலைகள் (Demand Draft) பணம் வழங்கல் உத்தரவு (Pay Order) வங்கியாளர் காசோலை (Banker's Cheque) ஆகியவற்றின் கால அளவை 6 மாதங்களிலிருந்து 3 மாதங்களாக குறைக்கப் பட்டுள்ளது. மேற்கண்டவைகளில் குறிப்பிடப் பட்டுள்ள தேதியிலிருந்து 3 மாதங்கள் மட்டுமே அவைகள் செல்லும்படியும் அந்த கால அளவை தாண்டி விட்டால் அவை காலாவதியாகிவிடும். வங்கியில் செலுத்தி பணம் வசூலுக்கு அனுப்ப இயலாது என்று இந்திய ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது. இந்தப் புதிய விதி ஏப்ரல் -1 முதல் அமுலுக்கு வந்துள்ளது.

சுப்பையா சாலையில் உள்ள நமது குடோன்கள், கட்டிடங்களின் பாதிப்புகளை அறிந்து உரிய நடவடிக்கை எடுக்கத் தலைவர் உள்ளிட்ட நிர்வாகிகள் 10-01-2012 அன்று முழுவதும் ஆய்வு செய்தனர். மரங்கள் விழுந்து கடுமையான சேதத்திற்குள்ளாகி உள்ளதால். அனைத்து நிர்வாகக்குழு உறுப்பினர்களையும் 11-01-2012 அன்று அழைத்துச் சென்று காட்டினோம் அதன் பின்னர், நாம் வர்த்தக மையம் அமைக்க முடிவு செய்துள்ள இடத்தை மாண்புமிகு. முதல்வர் அவர்களுக்குக் காட்டி அவரிடம் ஒப்புதல் பெறலாம் என்று முடிவு செய்து தலைவர் அவர்கள் மாண்புமிகு. முதல்வர் அவர்களுக்கு அழைப்பு விடுத்தார் அதனையேற்ற நமது முதல்வர் அவர்களும் 12-01-2012 அன்று மதியம் வருகை தந்து அனைத்து இடங்களையும் பார்வையிட்டார். பின்னர் புதுச்சேரிக்கு வர்த்தக மையம் தேவையென்றும் அதற்கு ஆவன செய்யப்படும் என்றும் உறுதி அளித்தார். அப்போது பொதுச்செயலாளர் சு. குணசேகரன், முன்னாள் தலைவர். மு. சிவசங்கர் இணைப்பொதுச்செயலாளர் க. முகம்மது சிராஜ், பொருளாளர் ச. தண்டபாணி (எ) ராஜா, குழு உறுப்பினர் ப. தணிகாசலம், கே. சுதாகர், க. வெங்கடேசன் எல்.பி. ரவி உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

புதுச்சேரி மாநிலத்தில் இயங்கும் கடைகள், வணிக நிறுவனங்கள், சிறிய, பெரிய உணவகங்கள், மோட்டார் தொழிலாளர்கள், நிறுவனங்கள் கடைகள் மற்றும் வணிக நிறுவனங்கள் சட்டம் அதன் திருத்தம் 2010-ன்படி தொழிலாளர் துறை, தொழிலாளர் அமுலாக்க அதிகாரி அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும் என்பது கட்டாயம் ஆகும். அவ்வாறு பதிவு செய்தவர்கள் ஒவ்வோராண்டும் உரிய கட்டணம் செலுத்தி புதுப்பித்துக்கொள்ள வேண்டும். என்பது கட்டாயம் ஆகும். வணிகர்களின் நலன் கருதி கடந்த ஆண்டு பதிவு செய்யும் சிறப்பு முகாம் ஏற்பாடு செய்தோம். இந்த ஆண்டும் தொழிலாளர் துறையுடன் இணைந்து 07-03-2012 முதல் 16-03-2012 வரை சிறப்பு முகாம் ஏற்பாடு செய்தோம். 07-03-2012, அன்று காலை 10.00 மணிக்கு முகாம் தொடக்க விழா நடைபெற்றது. மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் திரு. பெ. இராஜவேலு அவர்கள் தொடங்கி வைத்து பதிவு செய்தவர்களுக்கு முதல் சான்றிதழை வழங்கினார். நிகழ்ச்சியில், தொழிலாளர் துறை ஆணையின், திரு. கோ. மலர்கண்ணன், தொழிலாளர் அமுலாக்க

அதிகாரி திரு.பன்னீர்செல்வம், கலந்து கொண்டனர், மற்றும் தொழிலாளர் நல ஆய்வாளர்கள் நமது தலைவர் கே.ஏ. செண்பகராஜன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். மாண்புமிகு. தொழிலாளர் நல அமைச்சர் அவர்களிடம் வாரவிடுமுறை நாட்களிலும் கடைகளை திறந்து வணிகம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி மனு அளிக்கப்பட்டது. மனுவைப் பெற்றுக்கொண்ட அமைச்சர் அவர்களும் உரிய நடவடிக்கை எடுப்போம் என உறுதி அளித்தார்.

867 வியாபார பெருமக்களும், நிறுவனங்களும் இவ்வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டது மகிழ்ச்சியளிக்கிறது.

நிகழ்ச்சியில் துணைத்தலைவர் ப. ராஜேந்திரன் பொதுச்செயலாளர் சு. குணசேகரன் இணைப் பொதுச்செயலாளர் க. முகம்மது சிராஜ், பொருளாளர் ச. தண்டபாணி (எ) ராஜா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

### தாய்நாட்டின் வளர்ச்சியில் நம்பிக்கைகொண்ட குடிமக்கள். இந்தியர்களுக்கு இரண்டாவது இடம்

தாய் நாட்டின் பொருளாதாரத்தின் மீது அபார நம்பிக்கை கொண்டுள்ளதில் உலக அளவில் இந்தியர்கள் இரண்டாவது இடத்தில் உள்ளனர். முதல் இடத்தில் சவுதி அரேபியா உள்ளது.

பணவீக்கம் கட்டுப்படுத்தப்பட்டு, அன்னிய நேரடி முதலீட்டை அதிகம் ஈர்ப்பதால், இந்தியாவின் பொருளாதாரம் விரைவில் வலிமையடையும் என்ற நம்பிக்கை பெரும்பாலான இந்தியர்களிடம் ஏற்பட்டுள்ளது. ஆய்வு அமைப்பான இப்சாஸ் 24 நாடுகளைச் சேர்ந்த 19,216 குடிமக்களிடம் கடந்த பிப்ரவரி மாதம் எடுத்த ஆய்வில் இது தெரிய வந்துள்ளது. மேற்படி ஆய்வில் மக்கள் நம்பிக்கை அதிகம் பெற்றுள்ள நாடுகள் : சவுதி அரேபியா (90%) இந்தியா (74%) ஸ்வீடன் (73%) சீனா (72%) ஆஸ்திரேலியா (66%) கனடா (65%) இங்கிலாந்து (10%) ஜப்பான் (9%) பிரான்ஸ் (7%) இத்தாலி (6%) ஸ்பெயின் (4%)

### புதுச்சேரி கவர்னர் உரையின் சிறப்பம்சங்கள்...

தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் மின்வினியோக முறை மேலாண்மை செய்வதுடன் மின் நுகர்வோர் கட்டணம் மற்றும் கணக்கீட்டு முறை, திறன் தணிக்கை முறை, தகவல் தொழில்நுட்ப மேலாண்மை போன்றவற்றை ரூ.15 கோடி செலவில் நடைமுறைப்படுத்த மின்துறை திட்டமிட்டுள்ளது.

தானே புயலால் பாதிக்கப்பட்ட தாவர வகைகளை சீர் செய்வது அவசரத் தேவையாகும். அரசு, தனியார் நிறுவனங்கள், தொழிற்சாலைகள் மற்றும் விவசாயிகள் ஆகியோர் விலை மதிப்புமிக்க மரக்கன்றுகள் மற்றும் பழக்கன்றுகளை நட்டு, அதன் மூலம் மரவகைகளைப் பராமரித்தலைப் புனரமைப்பது, பசுமைத் தாவரப் புத்துயிர்க்கு வழி வகுக்கும்.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்துடன் ஒப்பிடுகையில் உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 60 சதவீதமாகவும், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 113 சதவீதமாகவும் உயர்ந்துள்ளது. இந்த ஆண்டின் சுற்றுலாப் பயணிகளின் உயர்வு 12.13 சதவீதம் ஆகும்.

புதுச்சேரியை, அனைவரும் விரும்பி வரும் சுற்றுலாத்தலமாக உருவாக்கும் வகையில், தானே புயலால் பாதிக்கப்பட்ட சுற்றுலா இடங்களை புனரமைக்க அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும். தனியார் மற்றும் அரசு பங்களிப்புடன், உயிரியியல் பூங்கா, பறவைகள் சரணாலயம் மற்றும் நைட் சபாரி அமைக்க மத்திய அரசை அணுகுவோம்.

### "தானே" புயல் முதல் அமைச்சர் நிவாரண நிதி அளித்தவர்கள் பட்டியல்

| | |
|---|---|
| வர்த்தக சபை | 50,000 |
| பி.ஆர். கோல்டு & சில்வர் கிராப்ட் | 25,000 |
| ஹோட்டல் அண்ணாமலை இன்டர்நேசனல் | 10,000 |
| மணி எலெக்ட்ரானிக்ஸ் | 10,000 |
| அபிராமி விலாஸ் | 10,000 |
| மாஸ் டெவலப்பர்ஸ் | 10,000 |
| அஜந்தா பேப்பர் கம்பெனி | 10,000 |
| நியூ பிலால் ஹோட்டல் | 10,000 |
| ஸ்ரீ சக்தி பாலாஜி ஆயில் மில்ஸ் | 10,000 |
| ஹோட்டல் கிரீன் பார்க் | 10,000 |
| ஆபரண மாளிகை | 7,000 |
| செண்பகா கார்ஸ் பி.லிட்., | 5,000 |
| பாண்டுரங்கா ஏஜென்ஸி | 5,000 |
| அசோசியேட் இன்டோ வியட்நாம் கம்பெனி | 5,000 |
| அசோசியேட் இன்டோ வியட்நாம் என்டர்பிரைசஸ் | 5,000 |
| ஆனந்த் டிம்பர் டிப்போ | 5,000 |
| திரு. ப. தணிகாசலம் | 5,000 |
| நவநீதம் & கோ | 5,000 |
| தி புட் வேர் | 5,000 |
| திரு. எ. ராஜகோபால் | 5,000 |
| ஸ்ரீ ராமச்சந்திரா பாட்டில் ஸ்டோர்ஸ் | 5,000 |
| தி பாண்டிச்சேரி ஸ்டேட் கெமிஸ்ட் | 5,000 |
| & டிரக்கிஸ்ட் அசோசியேசன் | 5,000 |
| பாண்டிச்சேரி ஆயில் மில் ஓனர்ஸ் அசோசியேசன் | 5,000 |
| முத்து சில்க் அவுஸ் | 5,000 |
| எம். புவனேஸ்வரி | 4,000 |
| ஹோட்டல் தனலட்சுமி | 3,000 |
| திரு. சி.எம். அப்துல் ரசாக் | 3,000 |
| சக்தி ஏஜென்ஸி | 3,000 |
| அன்னை அருள் மறுதோன்றி அச்சகம் | 3,000 |
| திரு. பி.என். பத்மநாபன் | 1,500 |
| ஜி.சி. தண்டபாணி & கோ | 1,000 |
| ஜி.சி. தண்டபாணி எலெக்ட்டிரிக்கல்ஸ் | 1,000 |
| சேகர் எலெக்ட்டிரிக்கல்ஸ் | 1,000 |
| வைசாலி டிரேடர்ஸ் | 1,000 |
| திரு. ஆர். கணேசன் | 1,000 |
| செமிகான் சொலியூசன்ஸ் | 1,000 |
| திரு. இ. ஜான்போஸ்கோ | 361 |
| மொத்தம் | 2,50,861 |

*With best compliments from ;*

**PROGRESS TRANSPORT**

No. 120, Rue Lal Bahadur, Pondicherry - 605 001.
Phone : 2336165, 2200179

# இதர நிகழ்வுகள்....



வாட் வரி உயர்வை திரும்பப் பெறக் கோரி மாண்புமிகு. முதல்வர் அவர்களிடம் மனு அளிக்கப்பட்டது.



"தானே" புயலால் பாதிக்கப்பட்ட சுப்பையா சாலை, குடோன்கள், இடங்களை தலைவர் உள்ளிட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் பார்வையிட்டார்கள்



வர்த்தக மையம் கட்டப்பட உள்ள நமது இடத்தை மாண்புமிகு. முதல்வர் அவர்கள் பார்வையிட்டு விரைவில் ஆவன செய்தவதாக உறுதி அளித்தார்


# சிகர நிகழ்வுகள்....



வர்த்தக சபையில் நடைபெற்ற குடியரசு தினவிழாவில், பொதுச் செயலாளர் சு. குணசேகரன் அவர்கள் தேசியக் கொடி ஏற்றி வைத்தார்.



சென்னையிலிருந்து வருகை தந்த தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு நிர்வாகிகளுடன் தலைவர் உள்ளிட்ட வர்த்தக சபை நிர்வாகிகள்




சென்னை உணவு பாதுகாப்பு மற்றும் தரப்படுத்துதல் சட்ட எதிர்ப்பு மாநாட்டில் கலந்து கொண்டு தலைவர் அவர்கள் சிறப்புரையாற்றினார்

# இதர நிகழ்வுகள்....



புதுச்சேரி 100 அடி சாலையில் மாமூல் தர மறுத்த வணிகர்கள் மீது நடைபெற்ற தாக்குதல்களை கண்டித்து வர்த்தகசபை பொதுச்செயலாளர் சு. குணசேகரன் அவர்களின் தலைமையில் மறியல் போராட்டம் நடைபெற்றது.



புதுச்சேரி 100 அடி சாலையில் மாமூல் தரமறுத்த வணிகர்கள் மீது நடைபெறும் தாக்குதல்களை தடுக்கக்கோரி காவல்துறை தலைவர் (பொறுப்பு) திரு. அதுல் கத்தாரி அவர்களிடம் மனு அளிக்கப்பட்டது.



வர்த்தக சபையின் 163 ஆம் ஆண்டுத் தொடக்க விழாவில் முன்னாள் தலைவர் டாக்டர். ந. கோவிந்தசாமி, முன்னாள் துணைத்தலைவர் என்.சி அப்துல்கபூர் முன்னாள் பொருளாளர் சி.எம். அப்துல் ரசாக் உள்ளிட்ட வர்த்தக சபை உறுப்பினர்கள் பங்கேற்றனர்




தொழிலாளர் துறை பதிவு சிறப்பு முகாமினை தொடங்கி வைத்த மாண்புமிகு. தொழிலாளர் நல அமைச்சரிடம், வார விடுமுறை நாட்களிலும் கடைகளை திறக்க உரிய நடவடிக்கை எடுக்கக்கோரி மனு அளிக்கப்பட்டது.





**T. PALANIVEL,** Proprietor


# ABIRAMI VILAS

DEALER IN STAINLESS STEEL AND ALUMINIUM

No. 111, Market Street, Nellithope, Puducherry - 5.
Shop : 2203323, Res : 2202327, Cell : 94431 58354

எண். 1, சுய்ப்ரென் வீதி, புதுச்சேரி - 605 001.
தொலைபேசி : 2338615 • தொலை நகல் : 0413 - 2338615
இணையதளம் : chambredecommerce.in
மின்னஞ்சல் : pcc1849@gmail.com / ccp_1849@yahoo.in

Publisher : K.A. SHENBAKARAJAN, PRESIDENT, CHAMBRE DE COMMERCE, No. 1, Rue Suffren, Puducherry - 605 001.
Printed at : MOTHER'S GRACE PRINTERS & GRAPHICS, No. 7, Sagayamatha Street, Muthiyalpet, Puducherry - 3.


Fascinating collections for Men, Women & Children
All Big Guys 'n' Gals...
dare to go with me for shopping?
Outfits
B Casual
Factory Outlet
Outfits - 67, 1st Floor, JN Street, (opp. Bata / Tanishq Showroom) Pondicherry 01. Ph. +91 413 4308110
B Casual - 441, Bharathi Street, Pondicherry 605 001. Ph. +91 413 4201110
Open on Sundays. Credit cards accepted.

Registrar of Newspaper for India, New Delhi Licence No. PONTAM00433/32/1/2012-TC










வகை வகையான வண்டிகள்....
வித விதமான வண்ணங்கள்....
வாங்கிடத் தூண்டும் சலுகைகள்....

# J Kay TVS

**AUTHORISED MAIN DEALER TVS MOTOR COMPANY LIMITED**

D/182, 100 Ft Road, Ozhandai, (Opp to RTO Office), Puducherry - 605 004.
Tel # (0413) 2280756 / 2280757